RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# கவிக்கோ அப்துல் ரகுமானின் குழந்தை இலக்கியச் சிந்தனைகள்

அ. கோகுல்கண்ணன் [அ *]

[அ] மொழிகள் துறை (தமிழ்), கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா,

# A Study of Child-Centered Literary Thought in Kavikko Abdul Rahman's Writings

A. Gokulkannan [a, *]

[a] Department of Languages, Karpagam Academy of Higher Education, Coimbatore - 641 021, Tamil Nadu, India.

*Corresponding Author:
kannanedu@gmail.com

**ABSTRACT**

Children are widely recognized as the pillars of a nation's future, and their holistic development is essential for building a progressive and prosperous society. The growth of children should contribute not only to their personal well-being but also to national development and social advancement. A child's future is not predetermined at birth; rather, it is shaped by the environment in which the child grows and the values imparted through upbringing and education. Consequently, nurturing children with sound moral guidance and positive values is more effective than attempting to reform adults after their character has already been formed. By instilling ethical principles, social responsibility, and compassion from an early age, society can cultivate responsible citizens who contribute to the common good. Recognizing this truth, Tamil literature—from the Sangam period to contemporary writings—has consistently emphasized the importance of childhood and child development as integral aspects of human life. Within this rich literary tradition, Kavikko Abdul Rahman occupies a distinctive place for incorporating child-centered themes and educational ideals into his works. His writings promote imagination, moral consciousness, empathy, humanism, and social values, thereby making a significant contribution to Tamil children's literature. Through his literary vision, he highlights the importance of shaping young minds with wisdom, creativity, and ethical awareness. This article examines the child-centered literary thoughts reflected in the works of Kavikko Abdul Rahman. It analyzes his perspectives on childhood, education, moral development, and social responsibility, demonstrating the enduring relevance of his ideas to contemporary children's literature and value-based education.

**Keywords:** Kavikko Abdul Rahman, Tamil Childrens Literature, Contemporary Writings, Social Values.

## முன்னுரை

இன்றைய குழந்தைகளே நாட்டின் எதிர்காலத் தூண்கள் என்று குழந்தைகளின் சிறப்பினை எடுத்துரைப்பர் குழந்தைகளின் வளர்ச்சி என்பது எதிர்காலச் சமுதாயத்திற்குப் பயன்தரக்கூடிய வகையிலும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் சமுதாய மேம்பாட்டிற்கும் துணைபுரிவதாகவும் இருத்தல் வேண்டும். எந்த ஒரு குழந்தையும் பிறக்கும்போதே தன் எதிர்காலத்தைத் தீர்மானித்துக் கொண்டு பிறப்பதில்லை. அது வாழும் சூழலையும் வளர்ப்பு முறையையும் பொருத்தே அதன் எதிர்காலம் அமைகின்றது. ஆதலால் வளர்ந்தவர்களுக்கு அறிவுரை சொல்லி, நல்லவர்களாக மாற்றச்செய்வதைக் காட்டிலும் குழந்தைகளுக்கு நல் அறிவுரைகளை எடுத்துரைத்து நல்ல சமுதாயம் ஏற்படுவதற்கு வழிவகை செய்திடல் வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டே சங்க இலக்கியங்கள் முதலாகத்

தற்கால இலக்கியங்கள் வரையில் குழந்தைகள் பற்றிய செய்திகள் மிகுதியாக இடம்பெற்று வருகின்றன. அவ்வகையில் கவிக்கோ அப்துல் ரகுமான் தன்னுடைய படைப்புகளில் குழந்தை இலக்கியம் சார்ந்த சிந்தனைகளை விதைத்துச் செல்கிறார். அதனை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## குழந்தைகள் பற்றிய அப்துல் ரகுமானின் சிந்தனைகள்

குழந்தைகளைப் பற்றிய தனிப்பட்ட அக்கறையோடு,"பௌர்ணமிப் பிறை" என்ற தலைப்பில் 'ஆலாபனை' தொகுதியில் எழுதியுள்ள கவிதை குழந்தைகளின் மேன்மையினை எடுத்துரைப்பதாய் அமைந்துள்ளது. குழந்தையாக இருந்து வளர்வதை வருத்தத்தோடு இக்கவிதையில் கவிஞர் குறிப்பிட்டுள்ளார். குழந்தைப் பருவம் மரணமடைந்தால் வாடுகிறோம் என்று கூறும் அப்துல் ரகுமான் குழந்தையின் சிரிப்பு, கலையின்மை, பேதம் பார்க்காத தன்மை, பாவம் செய்யத் தெரியாத போக்கு, துள்ளித்திரியும் மனப்பான்மை இவற்றைக் குழந்தைகள் பெற்றிருக்கும் வரங்களாகக் கூறியுள்ளார்.

வயதைத் தண்டனையாகவும், வளர்ச்சியை நோயாகவும் கருதும் போக்குப் புதுமையானது. அறியாப் பருவம் என்று அழைக்கப்படும் குழந்தைப்பருவம் அறிவின்மையைச் சுட்டினாலும், அறிவினால் ஏற்படும் குற்றங்களைத் தவறுகளைப் பெறாமல் இருப்பது சிறப்பானது. இதனை,

“அறியும் பருவத்தில் நாம் அறிந்து கொண்டது

பேதங்களையும் பாவங்களையும் தானே?

அறிவு ஓர் அழுக்கா?” (ஆலாபனை, ப.எ.20)

என்று குறிப்பிடுகின்றார்.

மொட்டாக இருப்பது மலரும் பொழுது மணம் பரப்புவது இயற்கை ஆனால், மனித இனத்தின் மொட்டுப்பருவம் மனம் பரப்புவதாகவும் வளர்ந்துவரும் மனித நிலைப்பருவம் நச்சுக்காற்றைப் பரப்புவதாகவும் கூறுகிறார். குழந்தையைப் பௌர்ணமிப் பிறையாகக் கூறியிருக்கின்ற அபதுல்ரகுமான், வளர வளர ஒளியினை இழக்கின்ற நிலவாக மனிதன் மாறிப்போகின்றான் என்று கூறுகின்றார்.

மதம், பொருளாதாரம் இரண்டும் மனிதனைச் சாத்தான்கள் ஆக்கிவிட்டதாகக் கூறியிருக்கும் இவர் குழந்தைகளைத் தெய்விக நிலையில் வைத்துப் போற்றுகின்றார். இறைவன் அனுப்பிய வாழ்த்துமாகக் குழந்தைப் பருவம் சொல்லப்பட்டுள்ளது. இறைவன் அனுப்பிய வளர்ந்த நிலையில் அழுக்கோடு காணப்படும் மானுடத்தைச் சலவை செய்ய மீண்டும் அறியாப் பருவமாகிய குழந்தைப் பருவம் வேண்டுமென்று வரம் கேட்பதைப் பின்வரும் தொடர்களால் அறியலாம்.

“இறைவா! எங்களுக்கு மீண்டும்

அந்த அறியாப் பருவத்தைக் கொடு

எங்களைச் சலவை செய்ய

வேதங்களையும் தூதர்களையும்

மீண்டும் மீண்டும் அனுப்பும் சிரமம்

உனக்கு இருக்காது” (ஆலாபனை, ப.எ.22)

இதனால் குழந்தைப் பருவத்தை ஆராதிப்பவராக கவிஞரைக் காண முடிகிறது.

## கல்விச்சுமை

"பித்தன்" என்னும் கவிதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள "புத்தகம்" என்னும் தலைப்பில் அமைந்துள்ள கவிதை குழந்தைகள் பெறவேண்டிய கல்வி தொடர்பான செய்திகளை விளக்குகின்றது.

குழந்தைகளைப் பாடப் புத்தகங்களாகப் பார்க்கின்ற பார்வை தமிழ்க்கவிதையுலகில் புதிய பார்வையாகும். குழந்தைகளை இறைவன் நமக்கு அனுப்புகின்ற நலம் விசாரிப்புக் கடிதமாகப் பார்த்துள்ளார். ஆனால், இக்கவிதையிலோ குழந்தைகள் இவ்வுலகம் படிக்க வேண்டிய பாடப்புத்தகமாக அறிமுகமாகியுள்ளனர்.

"குழந்தைகளே

பாடப்புத்தகங்களாக

இருக்கிறார்கள்

அவர்கள் கையில் ஏன்

காகிதக் குப்பைகளைத்

தருகிறார்கள்" (பித்தன், ப.எ.80)

நடமாடும் பல்கலைக்கழகங்களை அறியலாம். ஒவ்வொரு குழந்தையும் ஒருவிதத்தில் புத்தகம்தான் புத்தகம் படிக்கப்படிக்க மன நிறைவையும், மகிழ்ச்சியையும், அறிவையும், தெளிவையும் தரும். அதுபோலக் குழந்தைகளும் பழகப்பழக அன்பையும். மகிழ்ச்சியையும், மலர்ச்சியையும், மனநிறைவையும் தருவதாய் இருக்கும். ஆதலால் குழந்தைகளையும் புத்தகங்களையும் ஒன்றிணைத்துப் பார்க்கும் அப்துல் ரகுமானின் சிந்தனை வாழ்வியல் எதார்த்தத்தோடு பொருந்தியதாய் அமைந்துள்ளது. ஆகவே, இங்குக் குழந்தைகளை நடமாடும் புத்தகங்களாக அப்துல் ரகுமான் அறிமுகம் செய்கின்றார்.

மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்லும்போது மகிழ்ச்சியுடன் செல்வதில்லை. பெற்றோர்கள் தமக்குத் தரும் தண்டனையாகவே கருதுகின்றனர் என்பது கருத்ததக்கதாகும்.

இன்றையக் கல்விமுறை குழந்தைகளைச் சேதப்படுத்தி வருவதனைக் கவிஞர்,

அப்துல் ரகுமான்,

"புத்தகங்களே

சமர்த்தாய் இருங்கள்

குழந்தைகளைக்

கிழித்து விடாதீர்கள்" (பித்தன், ப.எ.80)

என்னும் கவிதையால் புலப்படுத்துகின்றார். பாடப்புத்தகமாக மட்டுமல்ல குழந்தைகள் கவிதைகளாகவும் திகழ்கின்றார்கள் என்பதனை,

"ஒவ்வொரு குழந்தையும் கவியாகவே பிறக்கிறது. நம்முடைய மலட்டுப் பாடத்திட்டங்களால் வறண்ட வாழ்க்கைத் தத்துவாங்களால் நாம் தாம் அந்தக் கவியைக் கொன்று விடுகிறோம்" என்று குறிப்பிடுகின்றார். (கரைகளே நதியாவதில்லை, ப.எ.73)

இவ்வாறாகக் குழந்தைகள் புனிதமானவையாகவும், ஆனால் அவர்கள் இடம்பெற்றிருக்கும் சமூகம் அவர்களை அழுக்குப்படுத்துவதாகக் குறிப்பிடுகின்றார் அப்துல் ரகுமான்.

## குழந்தைத் தொழிலாளர்

வேலைக்குச் செல்லும் குழந்தைகளின் துயரநிலையினைப் போக்காமல் குழந்தைகள் தினம் கொண்டாடுவது போலியான சடங்காகிப் போய்விட்டதாகக் கருதுகின்றார் அப்துல் ரகுமான்.

சடங்காகக் குழந்தைகள் தினம் கொண்டாடும் இச்சமூகத்தைப் பார்த்து அவரால் எழுப்பப்படும் கேள்வி.

"வருடம் தவறாமல்

குழந்தைகள் தினத்தைக்

கொண்டாடுபவர்களே

குழந்தைகளை எப்போது

கொண்டாடப் போகிறீர்கள்?" (சுட்டுவிரல், ப.எ.89)

என்பதாகும் குழந்தைகள் எதிர்காலத்தின் ஒளிவிளக்குகள் என்று போலியாகப் பேசுபவர்களே! இவர்களின் எதிர்காலமே இருண்டு கொண்டிருப்பதைக் காணவில்லையா நீங்கள்? என்று கேள்வி எழுப்பவும் செய்கிறார்.

## தொகுப்புரை

குழந்தைகளுக்கான சிந்தனைகளை தம் படைப்புகளில் எடுத்துரைத்துள்ள அப்துல் ரகுமான் சமூகப் பொறுப்புள்ள கவிஞராக விளங்குகிறார். இச்சமூகம் குழந்தைகளின் இயல்பான வளர்ச்சியைத் தடுப்பதனைச் கண்டித்துள்ளார். குழந்தைத் தொழிலாளர்கள் தடைசெய்யப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார். இன்றைய கல்விக் கூடங்களையும், கல்வி முறைகளையும் பாடத்திட்டங்களையும் கடுமையாகச் சாடியுள்ளார். வாழ்க்கையைப் படிக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தாத ஏட்டுக் கல்வியினைக் குறை கூறியுள்ளார். தாய்மொழிக் கல்வியினை வற்புறுத்தியுள்ளார். கல்வியைச் சுமையாகக் குழந்தைகளுக்குக் கொடுக்காமல் விருப்பத்துடன் படிக்க வழிவகை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார். கவிஞரின் இச்சிந்தனைகள் யாவும் குழந்தைகளைப் புரிந்து கொள்ள உதவக்கூடியனவாகும்.

## References

கவிக்கோ அப்துல் ரகுமான், (1989) சுட்டு விரல், யூனிவர்சல் பப்ளிஷிங்

கவிக்கோ அப்துல் ரகுமான், (1995) ஆலாபனை, யூனிவர்சல் பப்ளிஷிங்

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License